# கொக்குவில் இந்துக் கல்லூரி
# பழைய மாணவர் சங்கம் (கனடா)
# KOKUVIL HINDU COLLEGE
# OLD STUDENTS ASSOCIATION (CANADA)
# 2017

15 வயதுக்கு உட்பட்டோர் – ஆண் / பெண்
பேச்சுப் போட்டி

## கல்விச் செல்வம்

செல்வத்துள் மிகச் சிறந்தது கல்விச் செல்வமே ஆகும். இது பொன், பொருள் முதலிய பொருட் செல்வங்களைப்போல பங்காளிகளாலும், கள்வர்களாலும் கவர்ந்து செல்ல முடியாதது ஆகும். ஏனைய செல்வங்களைப்போல் தீயால், வெள்ளத்தால், காற்றால் அழிக்கப்பட முடியாததும் ஆகும். ஒருவரிடம் இருக்கும் பொருட் செல்வம் கொடுக்கக் கொடுக்க குறைவடைந்துவிடலாம். ஆனால் ஒருவன் தன்னிடம் உள்ள கல்விச் செல்வத்தை மற்றவர்க்கு அள்ளி வழங்க வழங்க அவன் மேலும் அறிவாளி ஆவான். ஆகவே கொடுக்கக் கொடுக்க பெருகுவது கல்விச் செல்வமே. பொருட் செல்வம் நிலையற்றது. அது பெருகப் பெருக அதனைப் பாதுகாக்க வேண்டும் என்ற கவலை உண்டாகி மனிதனை நோயாளியாகக் கூட ஆக்கிவிடும். ஆனால் ஒருவர் கற்கும் கல்வியும், அக்கல்வியால் பெற்ற அறிவை பிறர்க்குக் கொடுப்பதும், கொடுப்பவரின் வாழ்நாள் முழுவதும் நிலைத்து நிற்கும்.

“பிச்சை புகினும் கற்கை நன்று” என ஔவையார் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தி உள்ளார். கல்விச் செல்வம் கரையில்லாதது. கல்வியை எந்த வயதிலும் எப்பொழுதும் கற்க முடியும். கல்வியின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் பாடாத புலவர்களே இல்லை எனலாம்.

கல்வியின் சிறப்பை வள்ளுவர் …

“கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லாதோர்” என்றார்.

பாரதியாரும் …

“காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு”

என கல்விக்கே முதலிடம் கொடுத்து உள்ளார்.

கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. அவர்களுக்கே கற்றோர் அவைதனில் நன்மதிப்பு உண்டு. இதை உணர்ந்து, சிறுவயதில் இருந்தே நாம் கல்வியில் அக்கறை செலுத்த வேண்டும். கல்வியால் வாழ்வில் உயர்ந்து எமது பெற்றோர்க்கும், நாட்டிற்கும் பெருமை சேர்ப்போமாக.